**துணை ஆணையர் (மா.வ), வடக்கு -1 அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை - திருமதி.அ.பௌசியா பானு பி.காம்.,எம்.ஏ.,**
**இடம் - எண்.511, 5வது தளம், ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டிடம்,**
**யானைக்கவுனி சாலை, சென்னை -3.**

ந.க.எண். 1878/2023/ஆ1 நாள். 25.10.2024

| | | |
|---|---|---|
| பொருள் | | பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - சென்னை (வடக்கு) கோட்டம் துணை ஆணையர்(மாவ), வடக்கு - 1, சென்னை-3, - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – 2022-23 மூலம் பணி நியமனம் செய்யப்பட்டு - பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பதவி பணிவரன்முறை செய்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது. |
| பார்வை | 1 | செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03, கடித எண்.1928/PSD-D2/2023, நாள் 04.09.2023. |
| | 2 | இணை ஆணையர்(மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் சென்னை-35, அவர்களின் செயல்முறை ந.க.எண் 5983/2023/அ2, நாள்.21.09.2023. |
| | 3 | இணை ஆணையர்(மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை -03 அவர்களின் செயல்முறை ந.க. எண்7285/2023/அ1, நாள்.25.09.2023. |

****************

ஆணைகள்-

பார்வை 1 ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 மு.ப அன்று நடைபெற்ற தொகுதி 4 தேர்வின் மூலம் கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2 ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின் படி இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டனர். கீழ்கண்ட இளநிலை உதவியாளர்களுக்கு அவரவர் பதவியில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் /பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ச . வெங்கட்டமுனி, இளநிலை உதவியாளர் | துணைஆணையர் (மாவ), அலுவலகம், வடக்கு -1, சென்னை -03 | 03.10.2023 மு.ப | 03.10.2023 மு.ப |
| 2. | ஆ .சிவக்குமார், இளநிலை உதவியாளர் | துணைஆணையர் (மாவ), அலுவலகம், வடக்கு -1, சென்னை -03 | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |

(2) மேற்படி தனியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணிநிலையில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

(3) மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் தமிழ்நாடு அமைச்சு பணியாளர் விதி 32(a)(1)-ன்படி பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(4) தகுதிகாண்பருவக் காலத்தில் மேற்படி இளநிலை உதவியாளர்கள் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்ச்சி பெறவேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைகள் தேர்வு.
2. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சி.

(5) இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – (2022 - 23) பணி நியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(6) மேற்கண்ட தனியாளர், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து இரண்டாவது மற்றும் அதற்கு பிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவராவார்.

ஓம்/-அ.பௌசியா பானு,
துணை ஆணையர் (மாவ),
வடக்கு -1, சென்னை-3.

பெறுநர்

1. ச.வெங்கட்டமுனி, இளநிலை உதவியாளர்,
   துணை ஆணையர் (மா.வ) வடக்கு - 1 அலுவலகம்

2. ஆ .சிவக்குமார், இளநிலை உதவியாளர்,
   துணை ஆணையர் (மா.வ) வடக்கு - 1 அலுவலகம்

நகல் - தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

1.இணை ஆணையர்(மாவ),சென்னை (தெற்கு) கோட்டம்,சென்னை -35
2.இணை ஆணையர்(மாவ),சென்னை (வடக்கு) கோட்டம்,சென்னை- 03

//உண்மை நகல்//

25/10/24
மேலாளர்/ துணை மாநிலவரி அலுவலர்

25/10/24